# நாரம்மல பிரதேச சபை
# குருணாகல் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

அலவ்வ பிரதேச சபை 2011 ஏப்ரல் 01 ஆந் திகதி தொடக்கம் அலவ்வ மற்றும் நாரம்மல என இரண்டு பிரதேச சபைகளாக உருவாக்கப்பட்டதன் பின்னர் நாரம்மல பிரதேச சபையினால் 2011 ஏப்ரல் 01 தொடக்கம் 2011 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்குரிய நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தது.

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2011 ஏப்ரல் 01 தொடக்கம் திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்குரிய நிதிக் கூற்றுக்கள் 2012 யூன் 28 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அக்காலப்பகுதிக்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 ஒக்தோபர் 11 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

தலைவருக்கு அனுப்பப்பட்ட எனது அறிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நாரம்மல பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தம்பதெனிய உப அலுவலகத்தினால் உள்ளக இணைப்பு சிறுகற்கள் உற்பத்தி செய்யும் செயற்திட்டமொன்று பராமரிக்கப்படுவதுடன் மீளாய்வாண்டின் கணக்கீட்டுக் காலப்பகுதிக்குரிய உற்பத்தி மற்றும் இலாப நட்டக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு செயற்பாட்டு விளைவுகள் வருமானச் செலவினக் கணக்கில் சீராக்கப்படுவதற்குப் பதிலாக சிறுகற்கள் விற்பனை வருமானமான ரூபா 2,535,649 பெறுமதியானது 3.62 வருமானத் தலைப்பின் கீழ் கணக்கு வைக்கப்பட்டு செலவினங்கள் பொதுச் செலவினத் தலைப்பின் ஊடாக கணக்கு வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) உள்ளக இணைப்புக்களுக்கான சிறுகற்கள் செயற்திட்டத்தில் மீளாய்வாண்டின் கணக்கீட்டுக் காலப்பகுதியின் இறுதியில் எஞ்சியிருந்த மூலப்பொருள் இருப்பு மற்றும் பூர்த்தியடைந்த இருப்புக்கள் என்பன கணிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் அந்த இருப்புக்களின் பெறுமதி ரூபா 1,352,953 ஆக இருந்தது.

(இ) மீளாய்வாண்டின் கணக்கீட்டுக் காலப்பகுதியின் இறுதியில் மீளச் செலுத்த வேண்டிய ஒப்பந்த வைப்புக்கள் கணக்கில் ரூபா 1,507,657 தொகையான பிழையான வரவு மீதி எழுத்திருந்ததுடன் அது நிதிக் கூற்றுக்களின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஏனைய வருமானத் தலைப்பின் (60) கீழ் கணக்கு வைக்கப்பட வேண்டிய ரூபா 2,917,695 தொகையான முத்திரைக் கட்டணம் மற்றும் பிடியாணைக் கட்டணம் மற்றும் தண்டப்பணத்தின் கீழ் கணக்கு வைக்கவேண்டிய ரூபா 2,394,902 தொகையான நீதிமன்றத் தண்டப் பணம் ஏனைய உதவிகள் (70) தலைப்பின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

### கணக்காய்விற்காக தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 42,042,632 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 ஏப்ரல் 01 தொடக்கம் திசெம்பர் 31 இல் முடிவடைந்த கணக்கீட்டுக் காலப்பகுதிக்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 71,551 ஆக இருந்தது.

### 2.2 நிதிக்கட்டுப்பாடுகள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொங்கல் தன்மையுள்ள கணக்குகளின் வரவு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 630,430 ஆகும்.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 3,317 | 3,205 | 112 |
| (ii) | வுாடகை | 5,687 | 6,467 | 780 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 599 | 517 | 82 |
| (iv) | ஏனைய வருமானம் | 29,393 | 22,822 | 6,571 |

### 2.3.2 நீதிமன்ற தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 223,833 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 14,693 |

## 2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) அதிகாரச் சட்டத்தின் கீழ் உடன்படிக்கை கையொப்பமிடும் போது அதற்கான முத்திரைக் கட்டணத்திற்காக முத்திரை ஓட்டப்படாமல் கட்டணம் காசாகப் பெறப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் 03

உடன்படிக்கைகளில் ரூபா 23,810 பெறுமதியான முத்திரைகள் உடன்படிக்கைகளில் ஓட்டப்பட்டிருந்தன.

**2.5 மனிதவள முகாமைத்துவம்**

சிற்றூழியர் பதவியின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 34 ஆக இருந்ததுடன் நியமிக்கப்பட்ட எண்ணிக்கை 34 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் அமைய/ நாட்சம்பள அடிப்படையின் கீழ் 44 சிற்றூழியர்கள் சேர்க்கப்பட்டு சபை நிதியத்திலிருந்து சம்பளம் செலுத்தப்பட்டிருந்தன.

**2.6 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபை அதிகாரப் பிரதேசத்தில் 76 மயான நிலங்கள் காணப்பட்டதுடன் அதற்காக மீளாய்வாண்டின் போது பராமரிப்புச் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.“ மயான நிலங்கள் சபைக்கு கையளிக்கப்படாதிருந்தமையினால் எதிர்காலத்தில் கையேற்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக” தலைவர் 2012 செப்தெம்பர் மாதத்தின் போது எனக்கு அறிக்கையிட்டிருந்தார்.

(ஆ) நிறுவனத்திற்குரிய கூட்டிணைந்த திட்டம் மற்றும் மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத்திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.7 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நியமிக்கப்பட்டிராததுடன் உள்ளகக் கணக்காய்வு நிகழ்சிசித்திட்டத்தின் கீழ் போதியளவான உள்ளகக் கணக்காய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) ஒப்பந்த நிருவாகம்